# தமிழ் மக்களை முட்டாள்களாக்கும் செயற்பாட்டில் ரணில் சிங்கள மயமாக்கலையே முன்னெடுத்துச் செல்கின்றனர்!

### ஊடகச் சந்திப்பில் கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 ஆம் திருத்தம் தொடர்பில் மீண்டும் மீண்டும் பேச அழைப்பது, வடக்குக் கிழக்குத் தமிழரை முட்டாள்கள் ஆக்குவது மட்டுமல்லாது, ஒட்டு மொத்த ஈழத் தமிழர்களையும் அவர் மதிக்கத் தயாரில்லை என்பதையே காட்டுகின்றது, என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் தரப்பினருக்கு இந்தச் செயற்பாடு நன்றாகவே தெரியும் எனினும் தமிழ் மக்களின் பேரம் பேசும் வாய்ப்பை இல்லாமல் செய்து, சிங்கள மக்களாலேயே நிராகரிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்கு முண்டு கொடுக்கின்ற செயலாகவே அவரிடம் செல்வது இருக்கின்றது என்பதை தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும், எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ் கொக்குவிலில் உள்ள கட்சி அலுவலகத்தில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் மோசமான முகத்தைக் காட்டும் பல விடயங்கள் இன்னும் அம்பலமாகவுள்ளன.

இதேவேளை கடந்த ஒரு வருடமாக தீவகம் முழுவதும் அரசாங்கம் ஓர் அதிகார சபைக்குள் கொண்டு வந்து தீவகத்திலிருக்கும் அனைத்து நிர்வாகப் பணிகளையும் கொழும்பால் நேரடியாக ஆட்சி அதிகாரம் செய்வதற்குரிய வகையிலான திட்டத்தை அமைச்சரவையில் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தும் வகையில் கொண்டுவந்துள்ளது.

அண்மையில் ரணில் யாழ்ப்பாணத்திற்கு பயணம்



மேற்கொண்டபோதே குறித்த விடயம் தொடர்பாக ஒரு சில புத்தி ஜீவிகளைக்கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2 ➤


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 17 வியாழக்கிழமை 03.08.2023 கதிர் 43



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்



## சமஷ்டிக் கோரிக்கையால் நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஓடுமாம்!

### உதய கம்மன்பில எச்சரிக்கை

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தால் இந்த நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஓடும், என புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிடைக்காத ஒன்றைத் திருப்பித் திருப்பிக் கேட்டால் கிடைக்கும் என்று சம்பந்தன் அணியினர் எண்ணுகின்ற-



னர். கிடைக்காத சமஷ்டியை அவர்கள் கேட்பதால் அதில் விடாப்பிடியாக இருப்பதால் இன முரண்பாடு மேலும் உச்சமடையும். மீண்டும் இரத்தக்களரிதான் ஓடும்.

2 ➤

## மட்டக்களப்பிற்கு பிரதமர் பயணம் பாரிய போராட்டத்திற்கு தீர்மானம்!

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பிரதமர் தினேஸ் குணவர்தன நாளை பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின்போது, மட்டக்களப்பு கச்சேரியில் பிரதமர் தலைமையில் உணவுப் பாதுகாப்பு சம்பந்தமான கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு மாவட்டத்தின் விவசாய சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா? அல்லது கச்சேரி அலுவலக மட்டத்தில் உள்ளவர்களுக்காக இந்தக் கூட்டம் இடம்பெறுகிறதா? என்பது தொடர்பான விளக்கத்தினை தமக்கு கச்சேரி மட்டத்தில் உள்ள அதிகாரிகள் வழங்க வேண்டும், என விவசாய கமக்கார அமைப்புகள் கோரியுள்ளன.

குறிப்பாக, உணவுப் பாதுகாப்பு சம்பந்தமாக பேச வேண்டுமாக இருந்தால் விவசாய கமக்கார அமைப்புகளுடனும் தான் பேச வேண்டும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்துவருகின்ற அராஜகங்கள், அத்துமீறிய காணிக் கொள்ளைகள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தொல்பொருள் ஆய்வு எனும் போர்வையில் திட்டமிட்ட வகையில் கண்ட இடமெல்லாம் புத்தபகவானுக்குச் சிலை வைப்பது போன்ற

2 ➤

## எரிவாயு விலைகளில் மாற்றம் லிட்ரோ நிறுவனம் அறிவித்தது

உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலை இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ காஸ்நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகச் சந்தையில் ஒரு மெட்ரிக் தொன் எரிவாயுவின் விலை 85 அமெரிக்க டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி இந்த விலை உயர்வு உள்ளூர்ச் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களுக்கான புதிய விலை விபரம் நாளை அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் மாதந்தோறும் திருத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2 ➤

## நீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட்டது!

நீர்க் கட்டண திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நேற்று நள்ளிரவு முதல் இந்தத் திருத்தம் அமுலாகும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் கட்டணத் திருத்தமானது குறைந்த வருமானம் பெறும், தோட்டப் பகுதிகளில் வசிக்கும் மற்றும் சமுர்த்தி உதவித் திட்டம் பெறும் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 ➤

## மட்டக்களப்பில் மாபெரும் எழுச்சி நடைப் பயணத்திற்கு அழைப்பு!




வேர்களை மீட்டு உரிமையை வென்றிட மாண்புமிகு மலையக மக்கள்!, என்னும் தொனிப்பொருளில் மலையகம்200ஆவது ஆண்டு எழுச்சிப் பயணம் மன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கு வலுச்சேர்க்கும் முகமாக மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து காந்தி பூங்கா வரையிலான மாபெரும் எழுச்சிப் பயணம் ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து காலை ஏழு முப்பது மணிக்கு தொடங்கும் நடைப்பயணம் மட்டக்களப்பு காந்தி பூங்காவை 11.30 மணியளவில் சென்றடைய உள்ளது.

குறித்த நடைபவனியை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

மலைய மக்களின் உரிமை

2 ➤

## மகாவலி வலயத்தில் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை!

மகாவலி வலயத்தில் காணி உறுதிப்பத்திரம் இல்லாத 20,000 பேருக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மேலும் 15,000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் பணி இம்மாதம் ஆரம்பிக்கப்படும் என்று விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து

2 ➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலை செய்தி இதழ்

# யாழ்.சுழிபுரம் பறாளாய் முருகன் கோயில் பௌத்த மயமாகிறதா? அச்சத்தில் மக்கள்



யாழ்ப்பாணம் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள நூற்றாண்டுப் பழமைவாய்ந்த அரச மரம், சங்கமித்தையுடன் தொடர்புடையது என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த அரச மரத்தைத் தொல்பொருள் சின்னமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அரசமரத்தைத் தொல்பொருள் திணைக்களத்தினர் கைப்பற்றி, புத்தர் சிலைகளை நிறுவி, முருகன் ஆலயத்தையும் ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்களிடம் எழுந்துள்ளது.

அதேவேளை, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி, தேரர்கள் சிலர் ஆலயத்திற்கு வந்து சென்ற நிலையில், ஆலய அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முனைப்புக் காட்டியிருந்தனர்.

இதற்கு பக்தர்கள் மற்றும் ஊரவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததால், தேரர்கள் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். இந்த நிலையிலையே தற்போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை பிரதேச மக்களிடைய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (க)

# வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட யாழில் மலையகம் - 200 எழுச்சிப் பேரணி!

"வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட" எனும் தொனிப் பொருளில் மாண்புமிகு மலையக எழுச்சிப் பேரணி யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மலையக மக்களின் உரிமை மற்றும் அவர்களின் மூதாதையர் விட்டுச் சென்ற சுவடுகள் ஊடாகப் பயணிப்பதை நோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தலைமன்னார் முதல் மாத்தளை வரையான மாண்பு மிகு மலையகம்-200 நடைபவனிக்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபவனி இடம்பெற்றது.

யாழ் மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பித்த நடைபவனி, யாழ்நகரப் பகுதியைச் சுற்றி, மீண்டும் பேருந்து நிலையத்தை வந்தடைந்து. அதனையடுத்து யாழ் நகரிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்டது.

இதன்போது, மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## புதிய நீர்க்கட்டண விபரப் பட்டியல்

| No. of units | Usage Charge Rs./Unit | Monthly Service Charge Rs. |
|---|---|---|
| 00-05 | 60.00 | 300.00 |
| 06-10 | 80.00 | 300.00 |
| 11-15 | 100.00 | 300.00 |
| 16-20 | 110.00 | 400.00 |
| 21-25 | 130.00 | 500.00 |
| 26-30 | 160.00 | 600.00 |
| 31-40 | 180.00 | 1,500.00 |
| 41-50 | 210.00 | 3,000.00 |
| 51-75 | 240.00 | 3,500.00 |
| 76-100 | 270.00 | 4,000.00 |
| Over 100 | 300.00 | 4,500.00 |

நீர் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் திருத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

அதன்படி, இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் வெளியிட்டுள்ளார்.

அலகுக்கு வசூலிக்கப்படும் கட்டணமும், மாதாந்திர சேவைக் கட்டணமும் இந்தத் திருத்தத்தில் உயர்த்தப்பட்டுள்ளன.

## யாழ் நகரில் கட்டணமானி பொருத்தாத முச்சக்கரவண்டிகள் அகற்றப்படுகின்றன



யாழ் நகரப் பகுதி முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் இருந்து கட்டணமானி பொருத்தாத முச்சக்கர வண்டிகளை அகற்றும் நடவடிக்கையை யாழ்ப்பாணக் காவல் நிலைய போக்குவரத்துக் காவல்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

யாழ் நகர் பகுதியில் இன்றைய தினம் காலைமுதல் காவல்துறையினர் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ் மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்தாமையினால் கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் யாழ் மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாக முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது, என யாழ் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கடந்த இரண்டு மாத காலத்திற்கு முன்னரே அறிவித்து, கட்டணமானிகளைப் பொருத்த இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

## மகாவலி வலயத்தில் காணி உறுதிப்பத்திரங்களை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக கால்வாய்களைச் சுத்தம் செய்யக்கூட நிதி ஒதுக்க முடியாத நிலை காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, உலக வங்கியுடன் கலந்துரையாடி, நிதி அமைச்சின் ஆதரவுடன் இரண்டு திட்டங்களுக்கு 10,000 மில்லியன் ரூபாவை ஒதுக்க முடிந்ததாகக் குறிப்பிட்ட அமைச்சர், அதில் கால்வாய்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்பு மற்றும் நீர்த்தேக்கங்களை புனரமைப்பதற்கு 3,000 மில்லியன் ரூபா ஒதுக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்தார்.

கடன் அடிப்படையில் இந்த நிதி பெற்றுக்கொள்ளப்படுவதால் நீண்ட காலப் பயன்பாட்டைக்கொண்ட பணிகளுக்கு இதனைச் செலவிட அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மகாவலி வலயத்தில் வசிக்கும் ஒரு சிலருக்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாக காணி உறுதிகள் இருக்கவில்லை.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக காணி உறுதிகளை வழங்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். (க)

## மட்டக்களப்பில் மாபெரும் எழுச்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்திற்காக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர்களுடைய உரிமைப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய வர்த்தக சங்கங்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (க)

## நீர்க் கட்டணம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் 0-5 அலகுகளுக்கு 20 ரூபாவிலிருந்து 60 ரூபாவாகமவும் , 6-10 அலகுகளுக்கு 27 ரூபாவிலிருந்து 80 ரூபாவாகவும், 11 -15 அலகுகளுக்கு 34 ரூபாவிலிருந்து 100 ரூபாவாகவுமாக நீர்க் கட்டணம் அதிகரித்துள்ளது. (நீர்க்கட்டண அதிகரிப்பு தொடர்பான விபரப்பட்டியல் 2ஆம் பக்கத்தில்-)

## எரிவாயு விலைகளில் மாற்றம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிட்ரோ நிறுவனம் சமையல் எரிவாயுவின் விலைகளை இறுதியாக ஜூலை மாதம் 4 ஆம் திகதி குறைத்திருந்தது.

## மட்டக்களப்பிற்கு பிரதமர் பயணம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சயியாக இடம்பெற்று வருகின்றன.

இது போன்ற விடயங்களை சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்கள் பிரதமருடன் பேசவேண்டும், பிரதமருக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற போதிலும், குறித்த அமைப்புகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எது எவ்வாறாக இருந்தாலும், நாளைய தினம் விவசாயக் கமக்கார அமைப்புகள் மற்றும் பிரதமரைச் சந்திக்க விரும்புவர்கள் ,ணைந்து புறக்கணிக்கப்பட்ட சமூகமாக பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## சமஷ்டிக் கோரிக்கையால் நாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் இன முரண்பாடு உக்கிரமடைய நாம் விரும்பவில்லை. ஆனால், அந்த மோசமான நிலைமையைத் தமிழ்த் தலைவர்கள் விரும்புகின்றனர்.

அதை வைத்து நீண்ட காலத்துக்கு அரசியல் பிழைப்பு நடத்தலாம் என்று அவர்கள் தப்புக்கணக்குப் போடுகின்றனர், எனவும் அவர் தெரிவித்தார். (க)

## தமிழ் மக்களை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உத்தேசச் சட்டம் மகாவலியை விடவும் மிக மோசமான முறையில் அமைந்திருக்கும். முற்றுமுழுதாக தமிழ் மக்களுக்குப் பாதகமான முறையில் அது அமைவதோடு, அனைத்துச் செயற்பாடுகளும் கொழும்பில் இருந்தே கட்டுப்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக ரணில் விக்ரமசிங்கவிற்கு முண்டு கொடுக்கம் தமிழ்த் தரப்புக்களுக்கும் நன்றாகவே தெரியும்.

அதுமட்டுமன்றி தமிழ்த்தேசியம் பேசும் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றுக்கும் நன்றாகவே தெரிந்தும், அனைத்தையும் மூடி மறைத்து தமிழர்கள் மத்தியில் ரணிலுக்கு வெள்ளையடிக்கும் மிக மோசமான செயற்பாட்டிற்கும் தீவகத்தை முற்று முழுதாக இழக்க வேண்டிய ஒரு நிலைக்கும் இவர்கள் துணை போகின்றனர், என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கு கடற் பகுதிகளையும் சிங்கள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, கடற்றொழிலைச் செய்யவிடாது தடுத்ததோடு, தொழிலாளர்களை வெளிநாட்டிற்குச் செல்ல வைக்கும் ஒரு நிலையையும் ஏற்படுத்தியுள்ளனர், எனவும் 13ஆம் திருத்தத்தின் மூலம் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகக் காட்டிக்கொண்டு, சிங்கள மயமாக்கலை முன்னெடுத்துச் செல்கின்றனர், எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (க,01)

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு கால புதன் ஒன்றுகூடல்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றுவரும் நூற்றாண்டு கால புதன் ஒன்றுகூடலில் நேற்று புதன் கிழமை, ஒட்டிசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.

உள்ளத்தனையது உயர்வு என்ற பொருளில் உரையாற்றிய அவர் ஆசிரியர்கள், மாணவர்களது நிலையை அறிந்து செயல்பட வேண்டும். நேர்முகமாக சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும், எனக் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வினை கலாசாலையின் உடற்கல்விப் பாடநெறி ஆசிரிய மாணவி எலிசபெத் கொட்பரினா கென்றி முன்னிலைப்படுத்தினார்.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் ந.அனந்தசயனன் நிகழ்த்தினார். உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவன் இ.இராஜகோகுலன், போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதில் ஆசிரியர்களின் பங்கு என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

நிகழ்வில் அதிதிப் பேச்சாளர் நாகேந்திரராஜா கலாசாலை அதிபரால் கௌரவிக்கப்பட்டார்.



# அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற இலங்கைக் குடும்பம் மீது தாக்குதல்!

அவுஸ்திரேலியாவின் கீஸ்பரோ பகுதியில் வசிக்கும் இலங்கைக் குடும்பமொன்று வசிக்கும் வீட்டின் மீது கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை காலை 7 மணியளவில் இலங்கைக் குடும்பம் வாழும் வீட்டின் மீது நான்கு பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளமை சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

இதன்போது தாக்குதல்தாரிகள் கறுப்பு உடை அணிந்து, கூர்மையான ஆயுதங்களுடன் வந்து அச்சுறுத்திய நிலையில் தாக்குதலை எதிர்கொண்ட இலங்கையர் உடனடியாக அவர்களுக்குப் பதிலளித்துள்ளமையும் பதிவாகியுள்ளது.

மேலும், தாக்குதல் மேற்கொள்ள வந்தவர்களின் முக்கிய நோக்கம் தமது காரைக் கடத்திச் செல்வதாக இருக்கலாம் என சம்பவத்தை எதிர்கொண்ட இலங்கையர் உள்ளூர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தற்போது, சம்பவம் தொடர்பாக 17 வயதுடைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஏனையவர்களைக் கண்டுபிடிப்பதற்காக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் கட்டுரைப்போட்டி - 2023

யாழ்ப்பாணம், ஒக் 03

நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவினை முன்னிட்டு நடத்தப்படும் கட்டுரைப்போட்டி வழமை போன்று இம்முறையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையன்று சைவம், தமிழ், பண்பாடு, கலாச்சார விழுமியங்கள் தொடர்பான யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியானது, மாணவர்கள் கற்கும் பாடசாலைகளில் காலை 9 மணிக்கு நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்று பிரிவுகளாகப் போட்டி நடைபெறவுள்ளது.

1. கனிஷ்ட பிரிவு - 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது (100 சொற்கள்)
2. மத்திய பிரிவு - 9, 10, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது (150 சொற்கள்)
3. மேற் பிரிவு - 9, 10, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது (250 சொற்கள்) ஆகிய பிரிவுகளாக போட்டி நடைபெறும்.

கட்டுரைகள் யாவும் மதிப்பீட்டுக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு பரிசில்களும் ஏனைய 7 சிறந்த கட்டுரைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் யாவும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா நிகழும் செப்டெம்பர் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் வைத்து வழங்கப்படும். (மி)

# பிரான்ஸ் கோடைகால தமிழர் விளையாட்டு விழா





பிரான்சில் கடந்த 24 ஆண்டுகளாகப் பிரான்சு மனிதநேய அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக்கழம் நடாத்திவரும் கோடைகால தமிழர் விளையாட்டு விழா சென்ற ஆண்டுகளை விட இந்த ஆண்டு, பல்லாயிரம் தமிழ் மக்கள் பல்லின மக்கள், அரச பிரமுகர்கள், அனைத்துத் தமிழர் கட்டமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், வீரர்கள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள், இன உணர்வாளர்கள், குறிப்பாக இளையோர்களின் பங்கெடுப்புடன் கடந்த ஜூலை 30 ஆம் திகதியன்று சிறப்புடன் நடைபெற்றது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகளான தாச்சிப்போட்டி, முட்டியுடைத்தல், கயிறிழுத்தல், தலையணைப்போட்டி, சங்கீதக்கதிரை, குறி பார்த்துச் சுடுதல், சிறுவர்களுக்கான போட்டிகள் போன்றன நடைபெற்றன.

கலைப்பகுதியினர் தாயகப்பாடல்போட்டிகளையும், வர்த்தகர்கள் மலிவுவிலை மளிகைப் பொருட்களையும், நல்வாய்ப்புச் சீட்டுக்களையும், வெளியீட்டுப் பிரிவினர் தாயக நினைவுப் பொருட்களையும், மனிதநேய உதவி அமைப்புகள் தமது தேசம் நோக்கிய பணிகள் பற்றிய விளம்பரங்களையும், ஊடகங்கள் போட்டி நிகழ்வுகளையும், ஊடக ஒலிபரப்புகளையும் நடாத்தியிருந்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் ஈழத்தமிழர் உதைபந்தாட்டச்சம்மேளனத்தின் ஆதரவுடன் கடந்த மாதமளவில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியிலும், துடுப்பெடுத்தாட்டப் போட்டியிலும் வெற்றிபெற்ற கழகங்களுக்கும், வீரர்களுக்கும், பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை கோப்பாய், உடுவிலில் முகாம்!

யாழ் மாவட்டத்தில் கண்புரை (கட்ராக்ட்) சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான சத்திரசிகிச்சை யாழ் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சத்திரசிகிச்சை திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் அசிஸ்ட் ஆர்ஆர் நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டு, சத்திரசிகிச்சைகளுக்கான கண் வில்லைகளும், உபகரணங்கள், மற்றும் மருந்துப் பொருட்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத்தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையிலும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாம் அதே தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் நடைபெறவுள்ளன.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்குமான போக்குவரத்து வசதிகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (O1)

# சீனத் தலைநகரில் கொட்டிய கனமழை 20 பேர் மரணம் - ஏராளமானோர் தவிப்பு!




சீனாவின் தலைநகரான பீஜிங்கில் கடந்த 140 ஆண்டு காலமாக இல்லாத அளவிற்குக் கனமழை பெய்துள்ளது. கடந்த 1891 ஆம் ஆண்டுக்குப் பிறகு பீஜிங் நகரமே வெள்ளத்தால் மூழ்கியுள்ளதாக களப்பணியிலுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜுலை 29 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை 29 அங்குலத்திற்கு மழை பெய்துள்ளதாக சீன வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டோக்சுரி புயல் காரணமாக இந்த மழை பெய்துள்ளதாகவும் மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பீஜிங் நகரில் இருந்து 31,000க்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், வெள்ளத்தில் சிக்கி காணமல் போனவர்களைத் தேடும் பணிகளைத் தீவிரப்படுத்துமாறு மீட்புப் படையினருக்கு சீன அதிபர் ஸி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார். (மி)

## இத்தாலியில் சைபர் தாக்குதல் வங்கிச் சேவைகள் முடக்கம்!



இத்தாலியில் அண்மைய காலத்தில் சைபர் தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில், தற்போது இத்தாலியின் முக்கிய வங்கிகளான எம்.பி.எஸ் வங்கி, பி.பீ.ஈ.ஆர் வங்கி, சோன்ட்ரியோ வங்கி, பின்கோ வங்கி, செ வங்கி உள்ளிட்ட 5 வங்கிகளின் இணையத்தளங்கள் ஒரே நேரத்தில் முடக்கப்பட்டன. அத்தோடு, ஒரு தனியார் நிதி நிறுவனத்தின் இணையச் சேவையும் செயலிழக்கச் செய்யப்பட்டது.

இந்த இணையத் தாக்குதல் முடக்கம் காரணமாக வங்கிச் சேவைகள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டதோடு பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குமுள்ளாகினர். குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வங்கிச் சேவைகள் இயல்பு நிலைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இந்தத் திடீர் முடக்கத்தினால் வங்கிகள் எந்தவித பாரிய இழப்புகளையும் சந்திக்கவில்லை என வங்கி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சைபர் தாக்குதலுக்கு ரஷ்யாவைச் சேர்ந்த 'நோ நேம் 057' என்ற ஹக்கர்கள் குழு பொறுப்பேற்றுள்ளது. இது ஆரம்பம் மட்டுமே! என்றவாறாக குறுஞ்செய்திகளையும் அந்த ஹக்கர்கள் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், இத்தாலியின் இணையப் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று துறை சார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (மி)



## பிரேசிலில் போதைப் பொருள் கும்பல்கள் மீது குறிவைப்பு

### 44 பேர் சுட்டுக்கொலை!

தென்னமெரிக்கா நாடான பிரேசிலின் மூன்று மாநிலங்களில் கடந்த ஒரு வாரத்தில் நடந்துள்ள காவல்துறை நடவடிக்கைகளில் குறைந்தது 44 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரியோ டி ஜெனிரோவில் சட்டவிரோதப் போதைப் பொருள் கும்பல்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட பொலிஸ் நடவடிக்கையில், நேற்று புதன்கிழமை மட்டும் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரேசில் முழுவதும் குறைந்தது 44 பேர் பொலிஸ் நடவடிக்கையின் போது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



## 18 வருட திருமண உறவு முறிந்தது பிரியும் கனேடிய பிரதமர் தம்பதி

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் அவரது மனைவியும் அந்த உறவிலிருந்து பிரிவதாகத் தெரிவித்துள்ளனர்.

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது மனைவி சோபி இருவரும் நேற்று வெளியிட்ட யாரும் எதிர்பாராத ஓர் அறிவிப்பில், தாம் பிரிந்து செல்வதாகத் தெரிவித்துள்ளனர். இது தம்பதியினரின் 18 ஆண்டுகாலத் திருமண உறவின் முடிவைக் குறிப்பதாக உள்ளது.

இவர்கள் இருவரும் 2005 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு 15, 14 மற்றும் 9 வயதுகளில் மூன்று குழந்தைகள் உள்ளனர்.

தேர்தலில் பின்தங்கியுள்ள அவரது லிபரல் கட்சியின் பலத்தை உயர்த்தும் முயற்சியில் ட்ரூடோ ஒரு பெரிய அமைச்சரவை மாற்றத்தை வெளியிட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு தம்பதியினர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

பல அர்த்தமுள்ள மற்றும் கடினமான உரையாடல்களுக்குப் பிறகு, நாங்கள் பிரிவதற்கான முடிவை எடுத்துள்ளோம் என்ற உண்மையை நானும் சோபியும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம், என ட்ரூடோ தனது இன்ஸ்டகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (மி)



## கஸகஸ்தானில் அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ விபத்து - 16 குழந்தைகளுக்கு கடும் பாதிப்பு!

கஸகஸ்தானின் மிகப் பெரிய நகரமான அல்மாட்டியில் உள்ள 16 மாடிகள் கொண்ட குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

தீவிபத்தை அடுத்து அங்கு விரைந்த தீயணைப்புப் படையினர் பொதுமக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீயில் அகப்பட்ட குழந்தைகளை மாடி வழியாக வெளியே தூக்கி எறிந்தபோது, கீழே நின்றிருந்த பொதுமக்கள் போர்வை மற்றும் மெத்தைகள் கொண்டு அவர்களைப் பிடித்துக் காப்பாற்றினர். தீப்பற்றி எரிந்த கட்டடத்தில் இருந்து 300 பேர் காப்பாற்றப்பட்ட நிலையில், காயமடைந்த 16 குழந்தைகள் உட்பட 31 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருதாக கஸகஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. (மி)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அட்டவணை இந்தியா - பாகிஸ்தான் போட்டித் திகதி மாற்றம்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தை ஒக்டோபர் 14 ஆம் திகதியன்று விளையாடுவதற்கு பாகிஸ்தான் அணி ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இந்தத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் அஹமதாபாதில் ஒக்டோபர் 15 இல் நடைபெறும் என அறிவிப்பு வெளியானது. ஆனால், நவராத்திரியும் அதே நாளில் தொடங்குவதால் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பதில் சிக்கல் உள்ளது என உள்ளூர் காவல்துறை பிசிசிஜயிடம் தெரிவித்தது. அத்தோடு, பயணம் செய்வதில் சிரமம் இருப்பதாகக் கூறி, அட்டவணையில் மாற்றம் செய்யும்படி வேறு சில நாடுகளும் ஐசிசியிடம் கோரிக்கை முன்வைத்தன. இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஐசிசி கடிதம் எழுதியிருந்தது.

இந்த நிலையில் இந்தியாவுடனான ஆட்டத்தை ஒக்டோபர் 14 அன்று விளையாடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சம்மதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து முறையான அறிவிப்பை இந்த




வார இறுதிக்குள் ஐசிசி வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அட்டவணையில் செய்யப்பட்டுள்ள மாற்றத்தினால் ஒக்டோபர் பத்தாம் திகதி நடைபெறவிருந்த பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையிலான போட்டி, ஒக்டோபர் 12 அன்றும், ஒக்டோபர் 14 இல் டில்லியில் நடைபெறவிருந்த ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஒருநாள் முன்னதாக அதாவது, ஒக்டோபர் 13 அன்று நடத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

2015, 2019 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்களின் போது ஒரு வருடத்துக்கு முன்னதாகவே போட்டி அட்டவணை வெளியிடப்பட்டது. ஆனால், இந்தமுறை ஜுன் மாத இறுதியில்தான் அட்டவணையை ஐசிசியும் பிசிசிஜயும் வெளியிட்டன. ஒக்டோபர் ஐந்தாம் திகதியில் தொடங்கும் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதவிருக்கின்றன.




# உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடர் கடைசிப் போட்டியில் இலங்கைக்கு வெற்றி

தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரின் குழு ஈ-இற்கான தனது கடைசிப் போட்டியில், இறுதி காற்பகுதியின் அபார ஆட்டத்தின் உதவியுடன் பார்படோஸ் அணியை 60-56 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இலங்கை அணி தனது ஒரே வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.

இந்தத் தொடரில் இலங்கை அணி விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்திருந்த நிலையில், தனது இறுதி லீக் போட்டியில் நேற்று பார்படோஸ் அணியை எதிர்த்தாடியது.

போட்டியின் முதல் காற்பகுதியில் இரண்டு அணிகளும் சமபலமான ஆட்டத்தை வெளிப்படுத்தின. சிறப்பான போட்டியைக் கொடுத்த இரண்டு அணிகளும் 15-15 என்ற புள்ளிகள் கணக்கில் முதல் காற்பகுதியை சமப்படுத்தின.

தொடர்ந்து ஆரம்பித்த இரண்டாவது காற்பகுதியில் இலங்கை அணி தொடர்ச்சியாக 5 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் 21-16 என்று முன்னிலை பெற்றது. தொடர்ந்தும் அதிரடியாக ஆடி 24-17 என முன்னேறியது. எனினும் கடைசி நிமிடங்களில் 7 புள்ளிகள் என்ற முன் னிலையை 4 புள்ளிகளாக பார்படோஸ் அணி குறைக்க, முதற்பாதி 30-26 என இலங்கையின் முன்னிலையுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது காற்பகுதியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணிக்கு மூன்றாவது காற்பகுதி மோசமாக அமைந்திருந்தது. பார்படோஸ் அணி 5-0 மற்றும் 3-0 என்ற தொடர்ச்சியான புள்ளிகள் சேர்ப்பின் உதவியுடன் மூன்றாவது காற்பகுதியை 22-13 என கைப்பற்றியது. எனவே, அவ்வணி மூன்றாவது காற்பகுதி நிறைவில் 48-43 என முன்னிலை பெற்றது.

நான்காவது காற்பகுதியில் 5 புள்ளிகள் பின்னடைவில் களமிறங்கிய இலங்கை அணி, அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தொடர்ச்சியான 5-0 என்ற புள்ளிகள் சேர்ப்புடன் 48-50 என எதிரணியின் புள்ளிகளை இலங்கை நெருங்கியது.

எனினும் பார்படோஸ் அணி 54-50 என்ற முன்னிலையை அடைய, அதனைத் தொடர்ந்து இலங்கை மேலும் உத்வேகத்தோடு ஆடத்தொடங்கியது. இதன்மூலம் இலங்கை அணி மேலும் 10 புள்ளிளைப் பெற, பார்படோஸ் அணியால் 2 புள்ளிகளை மாத்திரம் பெறமுடிந்தது. எனவே, ஆட்டத்தின் இறுதியில் 60-56 என்ற புள்ளிகள் கணக்கில் இலங்கை அணி வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக திசாலா அல்கம தனக்குக் கிடைத்த 50 வாய்ப்புகளில் 47 புள் ளிகளைப் பெற, துலாங்கி வன்னிதிலக்க 13 வாய்ப்புகளில் 13 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

இலங்கை கடந்த 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் பார்படோஸ் அணியிடம் 67-33 என்ற புள்ளிகள் கணக்கில் மோசமான தோல்வியினைச் சந்தித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

# இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பிலிருந்து விலகினார்




நீண்ட காலமாக இத்தாலியில் பயிற்சி பெற்றுவந்த இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் அபேகோன், தனது காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்கப் போவதில்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தக் காயம் காரணமாக தாய்லாந்தின் பட்டாயாவில் அண்மையில் நடைபெற்ற 24ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரிலும் அவர் பங்கேற்றிருக்கவில்லை.

எவ்வாறாயினும், எதிர்வரும் செப்டெம்பர் 29ஆம் திகதி முதல் ஒக்டோபர் 5ஆம் திகதி வரை சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் நிச்சயம் பங்கேற்பேன், என அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், கடந்த சில மாதங்கள் எனக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மிகவும் கடினமாக இருந்தன. நான் காயத்தில் இருந்து மெதுவாகக் குணமடைந்து வருகிறேன். இந்த முடிவு எனக்கு மிகவும் கடினமாக இருந்தாலும், ஆரம்பத்திலிருந்தே எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இரண்டு போட்டித் தொடர்களில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

எனவே, உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். செப்டம்பரில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் எனது சிறந்த ஆற்றலை வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்துவேன், எனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதி ஹங்கேரியின் புடாபெஸ்ட்டில் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்குத் தகுதி பெறுவதற்காக வீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது. குறித்த காலப்பகுதியில் தனிநபர் போட்டி நிகழ்ச்சியொன்றுக்காக இலங்கை சார்பில் தகுதிபெற்ற ஒரே வீரர் யுபுன் அபேகோன் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் சூரிச்சில் நடைபெற்ற டயமண்ட் லீக் மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொண்ட யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 9.96 செக்கன்களில் நிறைவு செய்து தெற்காசியாவின் அதிவேக வீரராகத் தனது பெயரைப் பதிவு செய்துகொண்டதோடு, உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கும் தகுதியைப் பெற்றுக்கொண்டார்.



# உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் பிரேசில் மகளிர் அணி வெளியேறியது!

32 அணிகள் பங்கேற்றுள்ள மகளிருக்கான ஒன்பதாவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடந்து வருகிறது.

இதில் மெல்பேர்னில் நேற்று 'எப்' பிரிவில் நடந்த பிரேசில் - ஜமைக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் கோல் இன்றி (0-0) சமநிலையில் முடிந்தது.

மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் 6-3 என்ற கோல் கணக்கில் பனாமாவை வீழ்த்தியது.


'எப்' பிரிவில் பிரான்ஸ் 7 புள்ளிகளுடன் (2 வெற்றி, ஒரு சமநிலை) முதலிடம் பிடித்து தொடர்ந்து 4 ஆவது முறையாக 2 ஆவது சுற்றுக்கு முன்னேறியது.

ஜமைக்கா 5 புள்ளிகளுடன் (ஒரு வெற்றி, 2 சமநிலை) 2 ஆவது இடம் பெற்று முதல்முறையாக அடுத்த சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தது. பிரேசில் 4 புள்ளிகளுடன் (ஒரு வெற்றி, ஒரு சமநிலை, ஒரு தோல்வி) 3 ஆவது இடமும், அறிமுக அணியான பனாமா 3 ஆட்டங்களிலும் தோற்று புள்ளிக் கணக்கை தொடங்காமலும் வெளியேறின.

பிரேசில் அணி உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் லீக் சுற்றுடன் வெளியேறுவது 1995 அம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.

'ஜி' பிரிவில் சுவீடன், தென்னாபிரிக்கா அணிகள் தங்களது கடைசி லீக்கில் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றை எட்டின. இன்றுடன் லீக் சுற்று முடிவுக்கு வருகிறது. இன்றைய ஆட்டங்களில் மொரோக்கோ - கொலம்பியா, தென் கொரியா - ஜெர்மனி அணிகள் மோதுகின்றன.

# அடிப்படை வசதிகளையாவது செய்துகொடுங்கள்! மே.இ. தீவுகள் கிரிக்கெட் சபைக்கு பாண்டியா அடி




மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவரும் இந்திய கிரிக்கெட் அணி, டெஸ்ட் தொடரை 1 - 0 , ஒருநாள் தொடரை 2-1 என்ற எண்ணிக்கைகளில் கைப்பற்றியது. இரண்டாவது மற்றும் மூன்றாவது ஒருநாள் ஆட்டங்களில் கோலி மற்றும் ரோஹித் சர்மாவுக்கு ஓய்வு அளிக்கப்பட, ஹர்திக் பாண்டியா இந்திய அணியை வழிநடத்தினார்.

இதனிடையே மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் முடிந்த பிறகு அடிப்படை வசதிகளையாவது செய்துகொடுக்கும்படி பாண்டியா தெரிவித்திருந்தமை பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது.

நாங்கள் விளையாடிய சிறந்த மைதானங்களில் இதுவும் ஒன்று. அடுத்த முறை இங்கே வரும்போது பயணம் செய்வதிலிருந்து பல விஷயங்களை நிர்வகிப்பது வரை இன்னும் சிறந்த முறையில் தயாராக இருப்போம். கடந்த ஆண்டும் சில சிக்கல்கள் இருந்தன. மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டிய நேரம் இது என்று நான் நினைக்கிறேன். நாங்கள் ஆடம்பரத்தைக் கேட்கவில்லை. ஆனால், எங்களுக்கான சில அடிப்படைத் தேவைகளாவது பூர்த்தி செய்யப்பட வேண்டும். மற்றபடி இங்கு விளையாடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், என்று அவர் தெரிவித்திருந்தார்.

முன்னதாக, ட்ரினாட்டிலிருந்து ஒருநாள் தொடருக்காக பார்படோஸிற்குப் பயணம்செய்யும்போது விமானப் பயணம் 4 மணித்தியாலங்கள் தாமதமானமை குறித்து இந்திய அணி பிசிசிஐ யிடம் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# குறித்த நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காமை ஆஸி - இங்கிலாந்து அணிகளுக்கு அபராதம்!

## சம்பியன்ஷிப் புள்ளிகளையும் இழந்தன

ஆஷஸ் தொடரில் நேரம் தாமதித்து, மெதுவாக ஓவர்களை வீசி முடித்தமைக்காக அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு அணிகளுக்குமே அபராதத் தொகையும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான அபராதப் புள்ளிகளையும் ஐசிசி விதித்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இரு அணிகளும் தலா இரண்டு வெற்றிகளைப் பெற, தொடர் சமனிலையில் முடிந்தது. இந்தத் தொடரில் குறித்த நேரத்துக்குள் ஓவர்களை முழுமையாக வீசாததால் ஐசிசி கடும் நடவடிக்கையை எடுத்துள்ளது.

முதல் டெஸ்ட்டில் 2 ஓவர்களையும் இரண்டாவது டெஸ்ட்டில் 9 ஓவர்களையும் மூன்றாவது டெஸ்ட்டில் 3 ஓவர்களையும் ஐந்தாவது டெஸ்ட்டில் 5 ஓவர்களையும் இங்கிலாந்து குறைவாக வீசியுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஓவருக்கும் ஓர் அபராதப் புள்ளி வீதம் அந்த அணிக்கு 19 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆஷஸ் தொடரில் இரண்டு வெற்றிக்கு 24 புள்ளிகளும் ஒரு சமநிலை முடிவிற்கு 4 புள்ளிகளையும் சேர்த்து மொத்தமாக 28 புள்ளிகளை இங்கிலாந்து பெற்றது. இதில் 19 அபராதப் புள்ளிகள் கழிக்கப்பட்ட நிலையில் அந்த அணி வெறும் 9 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளது. இதனால், புள்ளிகள் பட்டியலில் அந்த அணி ஐந்தாம் இடத்துக்கு இறங்கியுள்ளது.

அதேபோல, நான்காவது டெஸ்டில் அவுஸ்திரேலியா அணியும் ஓவர்கள் வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டது. 10 ஓவர்கள் குறைவாக வீசியதால் அந்த அணிக்கு 10 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டுள்ளன. எனவே, ஆஷஸ் தொடரில் அந்த அணி பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 28 இலிருந்து 18 ஆகக் குறைந்துள்ளது. உலகக் கிண்ணத்துக்கான புள்ளிப் பட்டியலில் அவுஸ்திரேலியா மூன்றாவது இடத்தில் உள்ளது.



இது மட்டுமல்லாது, தாமதமாக வீசிய ஒவ்வொரு ஓவருக்கும் போட்டிக்கான ஊதியத்தில் 5 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அவுஸ்திரேலியாவுக்கு நான்காவது டெஸ்ட்டுக்கான ஊதியத்தில் 50 சதவீதமும், இங்கிலாந்துக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஐந்தாவது டெஸ்ட் போட்டிகளுக்கு முறையே 10, 45, 15 மற்றும் 25 சதவீதத் தொகையும் அபராதமாக விதித்துள்ளது ஐசிசி.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2023இல் வெளியிடப்பெற்றது.